**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | DVC No. 12/2022 |
| Deposition of witness | | PW1 |
| Name | | **திருமதி. அருள் ஜோதி** |
| Husband Name | | **வாசன்** |
| Village | | **பட்டுக்கோட்டை** |
| Taluk | | **பட்டுக்கோட்டை** |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 33/-2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of September 2024

**1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு திருமணம் நடந்தது திருப்பதியில் என்றால் சரிதான். திருமணம் முடிந்த பிறகு எனது கணவருடன் கடலூரில் தனிக்குடித்தனம் இருந்தேன் என்றால் மாமியாரும் இருந்தார். நான் திருமணம் நடந்த பிறகு எத்தனையாண்டு சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் இரண்டு வருடம். திருமணம் நடந்ததிலிருந்து சேர்ந்து வாழ்ந்த காலத்தில் காவல் நிலையத்தில் என் கணவர் மீது வரதட்சனை கேட்டார் என்று புகார் தரவில்லை என்றால் சரிதான். தற்போது என் கணவரைப் பிரிந்து 4 வருடங்கள் ஆகியுள்ளது. என் பெற்றோர்கள் கடலூரிலிருந்து என்னை அழைத்து வந்தார்கள் என்றால் ஆமாம். என் கணவருக்கு நான் வந்த விபரம் தெரியாது என்றால் ஆமாம். அதனால் நான் காணவில்லை என்று கடலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அந்த விசாரணையில் என் பெற்றோருடன் சென்றேன் சொன்னேன் என்றால் ஆமாம். ஜெயந்தி என்பவர் உறவினர் என்று சொல்லியுள்ளேன். அவர் உறவினர் இல்லை என்றால் ஆமாம். என்

கணவருக்கு பழக்கம் கடலூரில் மர வியாபாரியிடம் பணம் ரூ.70,000/- அனுப்பியதாக நான் சொல்லியுள்ளேன் அப்படி யாரும் 1ம் எதிர் மனுதாரருக்கு தெரியாது என்றால் அவருக்கு தெரிந்த நபர் என்பதால் நான் அனுப்பினேன். என் கணவருக்கு வாங்கிகொடுத்த வண்டி என் தம்பி பெயரில்தான் உள்ளதுதான் என்றால் ஆமாம். அந்த வண்டியைதான் அவருக்கு கொடுத்தோம். அந்த வாகனம் விற்பனை செய்யப்பட்டது என்றால் என் கணவர்தான் விற்றுவிட்டார். வாகணத்தின் உரிமையாளர்தான் விற்க்கமுடியும் என்றால் ஆமாம். என் தம்பி வெளிநாடுபோக வாகணத்தை விற்றவிட்டு என் கணவர் விற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. என் சத்குரு என் திருமணத்திற்கு பிறகுதான் வெளிநாடு சென்றார் என்றால் ஆமாம். நாங்கள் அதற்கு பணம் கட்டினோம் என்றால் இல்லை. சித்தப்பா பணம் கட்டினார். என் தம்பி வெளிநாடு செல்வதற்கு நான் என் நகைகளை அடமானம் வைத்தேன் என்றால் இல்லை. என் நகைகளை குறைந்த வட்டி காரணமாக என் ஊரில் வந்து அடகு வைத்தேன் என்றால் ஆமாம். என் கணவர் சேர்ந்து வாழ வேண்டும் என்று கடலூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். நான் நீதிமன்றத்திற்கு சென்று அவருடன் சேர்ந்து வாழ்வதாக சொல்லி அவருடன் சேர்ந்துவிட்டேன். அவர் சொன்ன விசயங்களை நான் மறுத்து மனு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் இந்த வழக்கில் மேற்படி விவரங்களை சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள மசாஆ-8,9 என் பெயரில் பணம் செலுத்திய சலான் என்றால் ஆமாம். இரண்டாவது குழந்தையே ஜாதகம் சரியில்லை என்று நான் அபாசா செய்தேன் என்றால் இல்லை. அவர் கட்டாயத்தில்தான் செய்தேன். நான் M.A. B.ed.,படித்துள்ளேன். வேலைக்க போகவில்லை. வேலைக்குப்போக தகுதியுள்ளது என்றால் சான்றிதல் கடலூரில் உள்ளது. கடலூரில் என் கணவர் நடத்திய வாட்டர் சப்லே கொரணா காலத்தில் நஷ்டம் அடைந்து முடப்பட்டது என்றால் இல்லை. தற்போது நடந்து வருகிறது. 11.01.2020ல் அன்று என் கணவர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான்

பதில் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என் கணவருடன் சேர்ந்து வாழ சட்டப்படி எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் ஆமாம். நான் கணவருடன் சேர்ந்து வாழாமல் நான் புறக்கனிக்கிறேன் என்றால் இல்லை. அவர்தான விவகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் கணவர் என்மீது எந்த வன்முறையும் செய்யவில்லை நான் தான் அவரை விட்டுப் பிரிந்து வாழ்கிறேன் என்றால் இல்லை.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-எஸ்.கவிபிரியா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.